பொங்கல் கருணைத் தொகை– ஊராட்சிகளில் பணியாற்றும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி/ விசைப்பம்பு இயக்குபவர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப்பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2007–2008ஆம் ஆண்டுக்கு பொங்கல் கருணைத்தொகை வழங்குதல்

---

ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்(இ5) துறை

அரசாணை (2டி) எண்: 2 நாள்: 12.01.2009

படிக்கப்பட்டவை:

1. அரசாணை (2டி) எண். 13, ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறை, நாள் 25.1.08.
2. ஊரக வளர்ச்சி (ம) ஊராட்சி ஆணையரின் கடித எண். 1215/09/இ4, நாள் 9.1.09.

--

**ஆணை**

படிக்கப்பட்ட ஒன்றிலுள்ள அரசாணையில் ஊராட்சிகளில் பணிபுரியும் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி/ விசைப்பம்பு இயக்குபவர்கள், துப்புரவு பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப்பணியாளர்கள் ஆகியோர்களுக்கு 2006–07 ஆம் ஆண்டுக்கான பொங்கல் கருணைத் தொகையாக ரூ.300/– (ரூபாய் முன்னூறு மட்டும்) வழங்கப்பட்டது.

2. மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி/ விசைப்பம்பு இயக்குபவர்கள் துப்புரவு பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப்பணியாளர்கள் ஆகிய ஊராட்சிகளில் பணிபுரியும் பணியாளர்களுக்கு சென்ற முறை வழங்கப்பட்டது போல் இந்த ஆண்டும் பொங்கல் கருணைத் தொகை வழங்குவது குறித்து அரசு பரிசீலனை செய்தது.

3. ஊராட்சிகளில் 2007–08ஆம் ஆண்டில் 240 நாட்கள் மற்றும் அதற்கு மேலாக பணிபுரிந்த மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி/ விசைப்பம்பு இயக்குபவர்கள் துப்புரவு பணியாளர்கள் மற்றும் மக்கள் நலப்பணியாளர்கள் ஆகியோர்களுக்கு ஒவ்வொருவருக்கும் 2007–08 ஆம் ஆண்டு பொங்கல் கருணைத் தொகையாக 1000/– (ரூபாய் ஆயிரம் மட்டும்) சம்மந்தப்பட்ட ஊராட்சி நிதியிலிருந்து வழங்க அனுமதித்து அரசு ஆணையிடுகின்றது.

4. இவ்வாணை நிதித்துறையின் அ.சா.எண்.103/FS/P/2009 நாள்:09.01.2009–ல் பெறப்பட்ட இசைவுடன் வெளியிடப்படுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

**க.அஷோக் வர்தன் ஷெட்டி,**
அரசு முதன்மைச் செயலாளர்.